ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2263/41 - 2022 ජනවාරි මස 21 වැනි සිකුරාදා - 2022.01.21
*2263/41 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### *1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்*

*1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகள்*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,*
*நாணயச் சபையின் தலைவரும்*
*இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.*

*இலங்கை மத்திய வங்கி,*
*கொழும்பு,*
*2022 சனவரி 21.*

#### சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோரினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுக்கொள்ளுதல்

1. இவ்விதிகள் 2022 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க "சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோரினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுக்கொள்ளுதல்" விதி என எடுத்துக் காட்டப்படுதல் வேண்டும் என்பதுடன் 2022, சனவரி 21 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, திருத்தப்பட்டவாறான 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 10(இ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் ஒன்றிணைந்து வாசிக்கப்படும் 68ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய செயற்பட்டு, சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோரினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுக்கொள்வது தொடர்பில் விதிகளை விடுக்கின்றது.

1A - G 35884 — 60 (2022/01)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3.* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்து கொண்டுள்ள, அத்துடன் அதனால் உரிமம் வழங்கப்பட்டுள்ள சுற்றுலாவிடுதிப் பணி வழங்குவோர் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு வழங்கிய பணிகள் தொடர்பில், இவ்விதிகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் மாத்திரம் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*4.* மேலேயுள்ள விதி 3 இன் நியதிகளில் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தினை அத்தகைய வெளிநாட்டு நாணயம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று வேலைநாட்களுக்குள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றிற்கு அல்லது அனுமதிக்கப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கியொன்றிற்கு விற்றுவிட வேண்டும் அல்லது சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

5. மேலேயுள்ள விதி 3 இன் நியதிகளில் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளினூடாகச் செய்யப்பட்ட அனைத்துக் கொடுப்பனவுகளும் சுற்றுலாவிடுதிப் பணி வழங்குவோரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு உடனடியாக வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

*6.* மேலேயுள்ள விதி 3 இற்கு எவ்வித பங்கமுமின்றி, இலங்கைக்கு வெளியே வதியும் ஆள் இலங்கைக்குள் வெளிநாட்டு நாணயத்தினைக் கொண்டு வந்தமைக்கும் அதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகரூடாக மாற்றிக்கொண்டமைக்கும் மூல ஆவணச்சான்றுகளை அத்தகைய ஆள் சமர்ப்பிப்பதற்குட்பட்டு, இலங்கைக்கு வெளியே வதியும் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட பணிகள் தொடர்பில் இலங்கை ரூபாவில் செய்யப்படும் கொடுப்பனவுகளைச் சுற்றுலாவிடுதிப் பணிகளை வழங்குவோர் ஏற்றுக்கொள்ளலாம்.

7. சுற்றுலாவிடுதிப் பணி வழங்குபவர், இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளினால் அவருக்கு வழங்கப்பட்ட மூல ஆவணங்களில் புறக்குறிப்பீட்டினைச் செய்து அத்தகைய ஆவணச்சான்றின் பிரதியை அத்தகைய இலங்கை ரூபாவினை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு அல்லது மற்றைய பதிவேடுகளைப் பேண வேண்டுமென சட்டத்தினால் விதிக்கப்படும் ஏற்புடைத்தான காலப்பகுதிவரை அதனைப் பேணிவருதல் வேண்டும்.

**8.** அனைத்து சுற்றுலாவிடுதிப் பணி வழங்குவோரும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் அத்துடன்/அல்லது இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் காலத்திற்குக் காலம் கேட்டுக்கொள்ளப்படுகின்றவாறான அறிக்கைகளையும் அத்துடன்/அல்லது கூற்றுக்களையும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கான பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

*9.* இவ்விதிகளின் நோக்கத்திற்காக, பேணப்படும் பதிவேடுகளை பரிசோதிப்பதற்கும் அல்லது பரீட்சிப்பதற்கும் இவ்விதிகளுடன் முழுமையாகவும் கண்டிப்பாகவும் இணங்குவதனை உறுதிசெய்வதில் அத்தகைய சுற்றுலாவிடுதிப் பணி வழங்குவோரினால் எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மீளாய்வு செய்வதற்கும் விடயத்திற்கேற்றவாறு ஆளுநர் அல்லது துணை ஆளுநரால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு தங்குதடையற்ற அணுகுவழிகளை வழங்குதலும் வேண்டும்.

*10.* எவரேனும் சுற்றுலாவிடுதிப் பணி வழங்குவோரினால் ஏதேனும் இணங்கிக்கொள்ளாமை தொடர்பில் அல்லது இவ்விதிகளை மீறுகின்றமை தொடர்பில் அவற்றிற்கெதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான உரிமையினை இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளர் கொண்டிருத்தல் வேண்டும்.

*11.* இவ்விதிகளின் நோக்கங்களுக்காக -

"அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12அம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதேகருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை" என்பது, கொடுகடன் அட்டை, பற்று அட்டை மற்றும் பெறுமதி சேமிப்பு அட்டை என்பன உட்பட பயன்படுத்துநர் வரவு, பற்று அல்லது வேறு ஏதேனும் வடிவங்களில் பெறுமதிகளை மாற்றல் செய்வதனை இயலுமைப்படுத்துகின்ற ஒரு அட்டை அல்லது சாதனம் எனப் பொருள்படுகின்றதுடன் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகின்ற நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் கொடுக்கல்வாங்கல் விபரங்களை அடையாளம் காண முடிகின்றதும் எனப் பொருள்படும்.

“வெளிநாட்டுச் செலாவணி” என்பது, அத்தகைய கொடுப்பனவுகள் வெளிநாட்டு நாணயத்தில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கரைகடந்த வங்கித்தொழில் கட்டளைகளின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் அடையாளம் காணப்பட்டவாறான குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியில் செய்யப்பட்டிருக்குமிடத்து 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

“வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு” என்பது, 2021 பெப்புருவரி 03ஆந் திகதியிடப்பட்ட 2213/38 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு 2021ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணப்படுதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

‘‘சுற்றுலாவிடுதிப் பணி வழங்குவோர்’’ என்பது, சுற்றுலா விடுதிகள், வில்லாக்கள், பங்காளாக்கள், விருந்தினர் இல்லங்கள், வீடுகளில் தங்குதல் அல்லது இவற்றுடன் தொடர்பான வேறு ஏதேனும் நிறுவனங்களை உள்ளடக்கிய சுற்றுலா தொழில்முயற்சிகளையும் 2005ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு செய்யப்பட்டு அதனால் உரிமம் வழங்கப்பட்ட சுற்றுலாப் பணிகளையும் உள்ளடக்குவது எனப் பொருள்படல் வேண்டும்.

‘‘இலங்கைக்கு வெளியே வதியும் ஆள்’’ என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

“மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.